www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi8S

தென்காசி மாவட்டம்
முழு ஆண்டுத் தேர்வு - 2025

21-04-25

வகுப்பு 8
அறிவியல்

காலஅளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 12×1=12**

1) வெப்பநிலையின் S.I அலகு ...........
அ) செல்சியஸ் ஆ) ஃபாரன்ஹீட் இ) கெல்வின் ஈ) ஆம்பியர்

2) ஒரு கோளக ஆடியின் குவியதொலைவு 10 செ.மீ எனில், அதன் வளைவு ஆரம் .........
அ) 10 செ.மீ ஆ) 5 செ.மீ இ) 20 செ.மீ ஈ) 15 செ.மீ

3) திரவ நிலையிலிருந்து திடநிலைக்கு மாறும் நிகழ்விற்கு ........... என்று பெயர்
அ) பதங்கமாதல் ஆ) குளிர்வித்தல் இ) உறைதல் ஈ) படிதல்

4) மனித காதுக்குக் கேட்கக்கூடிய அதிர்வெண் வரம்பு
அ) 2 Hz முதல் 2000 Hz வரை ஆ) 20 Hz முதல் 2000 Hz வரை
இ) 20 Hz முதல் 20000 Hz வரை ஈ) 200 Hz முதல் 20000 Hz வரை

5) வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்குக் காரணமான நிறமி ........
அ) நீரேறிய இரும்பு (II)ஆக்சைடு ஆ) மெலனின்
இ) ஸ்டார்ச் ஈ) ஓசோன்

6) நீரில் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவை ............ நிறை விகிதத்தில் இணைந்துள்ளன
அ) 1 : 8 ஆ) 8 : 1 இ) 2 : 3 ஈ) 1 : 3

7) சிவப்பு எறும்பின் கொடுக்கில் ............ அமிலம் உள்ளது
அ) அசிட்டிக் அமிலம் ஆ) சல்பியூரிக் அமிலம்
இ) ஆக்ஸாலிக் அமிலம் ஈ) ஃபார்மிக் அமிலம்

8) ............ ஒரு புரோகேரியோட்டிக் நுண்ணுயிரியாகும்
அ) வைரஸ் ஆ) ஆல்கா இ) பூஞ்சை ஈ) பாக்டீரியா

9) மண் அரிப்பைத் தடுக்கும் தாவரங்கள் ..........
அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள்
இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்

10) உங்கள் வெளிப்புறக் காதினைத் (பின்னா) தாங்குவது எது?
அ) எலும்பு ஆ) குருத்தெலும்பு இ) தசைநார் ஈ) காப்ஸ்யூல்

11) மண்ணில் விதைகளை இடும் செயல்முறையின் பெயர் ...........
அ) உழுதல் ஆ) விதைத்தல் இ) பயிர்பெருக்கம் ஈ) பயிர்ச்சுழற்சி

12) ............. என்ற சார்பு கொடுக்கப்பட்ட மதிப்புகளில் மிகச்சிறிய மதிப்பை நமக்குத் தரும்
அ) average ஆ) sum இ) min ஈ) max

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5×1=5**

13) நீரியல் உயர்த்தி ........... விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது
14) நீரின் கொதிநிலை .........
15) ............. சதுப்பு நில வாயு எனப்படுகிறது
16) ............. என்பது உயிரினங்களின் அமைப்பு மற்றும் செயல் அலகு ஆகும்
17) இரும்புச் சத்துப் பற்றாக்குறை .........., க்கு வழிவகுக்கிறது

**III. சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்துக 5×1=5**

18) நீர் மின்சாரத்தைக் கடத்தும்
19) PSLV மற்றும் GSLV ஆகியவை இந்தியாவின் புகழ்பெற்ற செயற்கைக்கோள்கள் ஆகும்.
20) டங்ஸ்டன் ஒரு குறைகடத்தியாகப் பயன்படுகிறது
21) காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் கார்பன் டை ஆக்சைடு உள்ளது
22) மார்ச் 3 உலக வனவிலங்கு தினமாகக் கொண்டாடப்படுகிறது

**IV. பொருத்துக 5×1=5**

23) அ) மேக்னடைட் - காந்த விசைக்கோடுகள்
ஆ) ஒரு சிறு சுழலும் காந்தம் - இயற்கைக்காந்தம்
இ) கோபால்ட் - காந்த ஊசிப்பெட்டி
ஈ) வளைபரப்புகள் - ஃபெர்ரோ காந்தப் பொருள்கள்
உ) பிஸ்மத் - டயா காந்தப் பொருள்கள்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**V. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண் 35) 10×2=20**

24) விசை ஒரு பொருளின் வடிவத்தை மாற்றும் செயலுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.

25) ஒளி எதிரொளிப்பு விதிகளைத் தருக

26) மீயொலி என்றால் என்ன?

27) விண்மீன் திறள் - வரையறு

28) ஒரு வேதிவினையில் வினைவேக மாற்றியின் பங்கு என்ன?

29) உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?

30) பொருண்மை அழியா விதி - வரையறு

31) தமிழ்நாட்டில் காற்றாலைகளைப் பயன்படுத்தி காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படும் இடங்களை எழுதுக

32) ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக

33) தசைநாண் மற்றும் தசைநார் ஆகியவற்றை வேறுபடுத்துக

34) கருவுறுதல் என்றால் என்ன?

35) ஒரு இரும்புப் பந்தின் வெப்பநிலையை 20°C உயர்த்த 1000J ஆற்றல் தேவைப்படுகிறது. அப்பந்தின் வெப்ப ஏற்புத் திறனைக் கணக்கிடுக.

**VI. எவையேனும் 8 வினாக்களுக்கு விடையளி. 8×4=32**

36) பாஸ்கல் விதியைக் கூறி அதன் பயன்பாடுகளைத் தருக

37) அ) வெப்பக் கடத்தப்படும் முறைகள் யாவை?
ஆ) ஒரு கலோரி - வரையறு

38) **கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு காரணம் கூறுக**
அ) ஒரு கண்ணாடித் தண்டினை பட்டுத்துணியில் தேய்க்கும்போது இரண்டும் மின்னூட்டமடையும்.
ஆ) உலர்ந்த தலை முடியில் சீப்பைத் தேய்த்து விட்டு சிறிய காகிதத் துண்டின் அருகில் கொண்டு சென்றால் அவை ஒட்டிக்கொள்ளும்

39) காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்களை ஏதேனும் நான்கைப் பட்டியிடுக.

40) ஏதேனும் நான்கு சேர்மங்களையும் அவற்றின் பயன்களையும் எழுதுக

41) கீழ்காணும் சமன்பாடுகளைச் சமன் செய்க
i) $Na + O_2 \rightarrow Na_2O$
ii) $Ca + N_2 \rightarrow Ca_3N_2$
iii) $N_2 + H_2 \rightarrow NH_3$
iv) $CaCO_3 + HCl \rightarrow CaCl_2 + CO_2 + H_2O$

42) நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன?

43) டெரிடோஃபைட்டுகளின் ஏதேனும் நான்கு பண்புகளை எழுதுக

44) உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

45) வேளாண் செயல்முறைகளை விவரி

**VII. விரிவான விடையளி. 3×7=21**

46) அ) அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளுடன் பட்டியலிடுக
**(அல்லது)**
ஆ) சந்திராயன் I ன் சாதனைகள் யாவை?

47) அ) அமில மழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்?
**(அல்லது)**
ஆ) நிலக்கரியின் பல்வேறு வகைகளைப் பற்றி விளக்குக

48) அ) தங்களைச் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள உன் வகுப்பு நண்பர்களுக்கு நீ என்ன பரிந்துரை செய்வாய்?
**(அல்லது)**
ஆ) காடு அழிப்பு என்றால் என்ன? காடு அழிப்பிற்கான காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை விளக்குக.

- - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com